Record 181

நகராட்சி நிர்வாக ஆணையர்
அலுவலகம், சென்னை-5.

ந.க.எண்.8703/99/ஆர்2

நாள்: 18.2.99.

181 69 253

## சுற்றறிக்கை

பொருள்: குத்தகை – நகராட்சிகள் – குத்தகைக்கு விடப்பட்ட கடைகள் மற்றும் பங்குகள் பெயர் மாற்றம் செய்வதை தடுப்பது தொடர்பாக அறிவுரைகள் வழங்கியது – தொடர் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை: நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை ந.க.எண்.21599/93/ஆர்2 நாள் 19.11.93.

------

நகராட்சிகளுக்குச் சொந்தமான கடைகளையும் பிற சொத்துக்களையும் பொது ஏலம் மூலம் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட உரிமைதாரர்களின் பெயர்கள் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்பட்டு அதன் மூலம் நகராட்சிகளின் வருமானம் பாதிக்கப்படுவது, இடைத்தரகர்கள் சலுகை பெறுவது போன்ற முறைகேடுகள் நகராட்சி நிர்வாக ஆணையரின் கவனத்திற்கு வந்ததால் பார்வையில் காணும் சுற்றறிக்கை மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள நகராட்சி சொத்துக்களுக்கு குத்தகை காலத்தின் இடையில் பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்ற நிபந்தனையினை தீர்மானம் மூலம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும், குத்தகை காலங்களில் குத்தகைதாரர் இறந்துவிட்டால் குத்தகை பெயர் மாற்றத்திற்காக வாரிசுதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பம் மட்டுமே நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

2. இது தொடர்பாக ஒரே சீரான முறையினைக் கையாளும் பொருட்டு குத்தகைதாரர்களின் வாரிசுதாரர்களிடமிருந்து பெயர்மாற்றம் கோரி பெறப்படும் விண்ணப்பங்களைக்கூட இனிவரும் காலங்களில் பரிந்துரை செய்து மேலனுப்ப வேண்டாம் என்று அனைத்து நகராட்சி ஆணையர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள். குத்தகை/உரிம காலங்களில் உரிமதாரர்கள் இறந்து போனாலோ அல்லது தங்கள் தொழிலைச் செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலோ நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பைத் தவிர்க்கும் பொருட்டு நகராட்சி அக்குத்தகை இனத்தினைக் கையகப்படுத்தி பொது ஏலத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கை பெறப்பட்டமைக்கு ஒப்பளிப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- சால்வத் ராம்,
நகராட்சி நிர்வாக ஆணையர்.

பெறுநர்
அனைத்து நகராட்சி ஆணையர்கள். (நகர்மன்றத் தலைவர்கள் வழியாக),
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

நகல்:
மாநகராட்சி ஆணையர்,
கோயம்புத்தூர்/மதுரை/திருச்சிராப்பள்ளி/சேலம்/
திருநெல்வேலி (மேயர் வழி),
ந.ஆ. பிரிவு கண்காணிப்பாளர்/உதவியாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.